# செந்தமிழ்

தொகுதி : 96 திருவள்ளுவர் ஆண்டு 2033 சனவரி 2002 பகுதி : 1

திங்கள் இதழ்

மதுரைத் தமிழ்ச் சங்கம் • THE MADURAI TAMIL SANGAM •

மதிப்புறு ஆசிரியர் இரா. அழகுமலை எம்.ஏ.,எம்.ஃபில்.,

மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை - 1.

## தமிழ்ச் சங்க ஆட்சிக் குழு

| | |
|---|---|
| முகவை மன்னர் திரு.நா. குமரன் சேதுபதி | தலைவர் |
| திரு. எம்.பி.ஆர். மலையாண்டி என்ற அசோக் | துணைத்தலைவர் |
| திரு. இரா. அழகுமலை | செயலாளர் |
| திருமதி. இராணி இலட்சுமி நாச்சியார். | உறுப்பினர் |
| திரு. மா. சங்கர பாண்டியன் | உறுப்பினர் |
| திரு. டாக்டர். ந. சேதுராமன் | உறுப்பினர் |
| திரு. கே. கந்தசாமி | உறுப்பினர் |
| திரு. வெ. பழனிச்சாமித்தேவர் | உறுப்பினர் |
| திரு. வே. திருவரங்கராசன் | உறுப்பினர் |
| திரு. க.சி. அகமுடைநம்பி | உறுப்பினர் |
| திரு. ச. பரங்குன்றம் | உறுப்பினர் |
| திரு. அ. சாமிஐயா | உறுப்பினர் |

## செந்தமிழ் ஆசிரியர் குழு

பேரறிஞர். நா. பாலுசாமி
பேரறிஞர். தமிழண்ணல்
பேரறிஞர். செ. கந்தசாமி
டாக்டர். ந. சேதுராமன்
பேரறிஞர். ம.ரா.போ. குருசாமி
பேரறிஞர். கதிர். மகாதேவன்
பேரறிஞர். கு. துரைராசு
பேரறிஞர். அ.அ. மணவாளன்
பெரும் புலவர். இரா. இளங்குமரன்
பேரறிஞர். அ. தட்சிணாமூர்த்தி
பேரறிஞர். ந. வாசுகிராஜா
பேரறிஞர். ஈ.கி. இராமசாமி
பேரறிஞர். சே. அரிராமநாதன்
பேரறிஞர். அ.மா. பரிமணம்
திரு. வே. திருவரங்கராசன்

# செந்தமிழ்

திங்கள் இதழ்

| இதழ் கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக்கட்டணம் | ரூ. 60 | ரூ. 600 |
| வாணாள் கட்டணம் | ரூ. 500 | ரூ. 2000 |
| புரவலர் கட்டணம் | ரூ. 1000 | ரூ. 2000 |
| தனி இதழ் கட்டணம் | ரூ. 6 | |

மதிப்புறு ஆசிரியர் :

**இரா. அழகுமலை** எம்.ஏ.,எம்.ஃபில்.,

மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை - 1.

# பொருளடக்கம்


1. எல்லோர்க்கும் தொல்காப்பியம்.
பேரறிஞர் நா. பாலுசாமி ..... 1

2. ஓர் இயற்றமிழ் மாணவனின் கல்வெட்டுப்பார்வை-I
பேரறிஞர் அ.மா. பரிமணம் ..... 5

3. மதுரைக் கோயில் கல்வெட்டுக்கள்.
பேரறிஞர் வெ. வேதாசலம் ..... 12

4. மாறிவரும் விருந்தோம்பல் பண்பு.
பேரறிஞர் மு. மீனா ..... 25

# எல்லோர்க்கும் தொல்காப்பியம்

- பேரறிஞர் நா. பாலுசாமி

## பிறப்பியல்

தொகுதி 95: பகுதி1 சனவரி 2001தொடர்ச்சி

(எழுத்துக்களின் பிறப்பு வரலாறு)

சூத்.83 உந்தி முதலா முந்துவளி தோன்றித்
தலையினும் மிடற்றினும் நெஞ்சினும் நிலைஇப்
பல்லும் இதழும் நாவும் மூக்கும்
அண்ணமும் உளப்பட எண்முறை நிலையான்
உறுப்புற்று அமைய நெறிப்பட நாடி
எல்லா எழுத்தும் சொல்லுங் காலைப்
பிறப்பின் ஆக்கம் வேறுவேறு இயல
திறப்படத் தெரியும் காட்சி யான.

“எல்லா எழுத்தும் நெறிப்பட நாடிச் சொல்லும் காலை, எண்முறை நிலையான் உறுப்புற்று அமைய, பிறப்பின் ஆக்கம் வேறு வேறு இயல; காட்சியான திறப்படத் தெரியும்” என்று சொற்களை முன்னும் பின்னும் கூட்டி வினை முடிக்கவும்.

(ப-ரை) எல்லா எழுத்தும் - எழுத்துக்கள் எல்லாம், நெறிப்பட நாடி சொல்லும் காலை - முறைப்பட ஆராய்ந்து சொல்லுமிடத்து, உந்தி முதலா - கொப்பூழ் அடியாக, முந்து வளி தோன்றி- மேலெழும் காற்று செயல்பட்டு, தலையினும் மிடற்றினும் நெஞ்சினும் - தலை, கழுத்து, நெஞ்சு ஆகிய இடங்களில், நிலைஇ - நிலைத்து, பல்லும் இதழும் நாவும் மூக்கும் அண்ணமும் - பல், இதழ், நா, மூக்கு, மேல்வாய், உளப்பட - உள்ளிட்ட, எண்முறை நிலையால் - எட்டு வகைகளால், உறுப்பு உற்று அமைய - உறுப்புக்களோடு பொருந்தி நிற்க, பிறப்பின் ஆக்கம் - அவ்வெழுத்துக்களின் பிறப்பு முறைகள், வேறு வேறு இயல - வேறு வேறு தன்மையினவாம், காட்சியான - இஃது ஆய்ந்து உணர, திறம்படத் தெரியும் - விரிவாக விளங்கும்.

எல்லாத் தமிழ் எழுத்துக்களும் கொப்பூழிடமாகத்

தோன்றும் உதானன் என்னும் காற்று, தலை, கழுத்து, நெஞ்சு ஆகியவற்றை இடமாகப்பெற்று, பல், இதழ், நா, மூக்கு, மேல்வாய் ஆகிய உறுப்புக்களின் முயற்சியால் வெவ்வேறு எழுத்தொலிகளாகப் பிறக்கும். இவ்வுண்மை ஆராய்வார்க்குப் புலனாகும் என்பதாம்.

(வி-ரை) உந்தி - அடிவயிறு. வளி - காற்று. மிடறு - கண்டம் (அ) கழுத்து. அண்ணம் - உள்நாக்கு (அ) மேல்வாய். காட்சியான் என்பது 'அ' கரச்சாரியை பெற்றுக் காட்சியான என நின்றது. காட்சி - அறிவு. இச்சூத்திரம் எழுத்துக்கள் பிறப்பதற்கு உரிய இடமும் முயற்சியும் சுட்டிற்று. இது தொகைச் சூத்திரம். இனி வருவன வகைச் சூத்திரங்கள்.

(உயிரெழுத்துக்களின் பிறப்பு)

சூத்.84. அவ்வழிப்
பன்னீருயிருந் தந்நிலை திரியா
மிடற்றுப் பிறந்த வளியின் இசைக்கும்

(ப-ரை) பன்னீர் உயிரும் - பன்னிரண்டு உயிரெழுத்துக்களும், தம் நிலை திரியா - தத்தம் மாத்திரைகள் திரியாமல், அ வழி பிறந்த - அவ்வுந்தியிடத்துப் பிறந்த, மிடற்று வளியின் இசைக்கும் - கழுத்தின்கண் நிலைபெற்ற காற்றால் ஒலிக்கும்.

உயிர் எழுத்துக்கள் பன்னிரண்டும் மிடற்றை (கழுத்தை) இடமாகப் பெற்று ஒலிக்கும். இச்சூத்திரம் உயிரெழுத்திற்குப் பொதுப்பிறப்புக் கூறுகின்றது.

(வி-ரை) வளி - காற்று. இசைக்கும் - ஒலிக்கும். தம்தம்-தத்தம். தம் நிலை, தந்நிலை எனப் புணரும். திரியா - மாத்திரை குன்றா.

சூத். 85 அவற்றுள்
அ ஆ ஆயிரண் டங்காந் தியலும்

(ப.ரை)அவற்றுள் - முன் கூறிய பன்னிரண்டனுள், அ ஆ - அ ஆ ஆகிய இரண்டு உயிரெழுத்துக்களும், அங்காந்து இயலும்- வாய் திறத்தலால் பிறக்கும்.

அ ஆ இரண்டும் வாயைத் திறந்து முயற்சி செய்தால் பிறக்கும்.

(வி-ரை) அங்காந்து- வாய்திறந்து, திறத்தல்- முயற்சித்தல்.

சூத்.86. இ.ஈ.எ.ஏ. ஐயென இசைக்கும்
அப்பால் ஐந்தும் அவற்றோ ரன்ன
அவைதாம்
அண்பல் முதல்நா விளிம்புறல் உடைய

(ப.ரை) இ ஈ எ ஏ ஐ என இசைக்கும் - இ ஈ எ ஏ ஐ என்று கூறப்படும், அ பால் ஐந்தும் - அவை ஐந்தும், அவற்று ஓர் அன்ன- மேற்கூறப்பெற்ற அ, ஆ போன்று வாய் திறத்தலால் பிறக்கும். அவைதாம் -அவ்வாறு பிறக்கும் அவை, பல் அண் நா முதல் - பல்லின் அடிப்பாகத்தை நாவின் அடிப்பகுதி, விளிம்பு உறல் உடைய - விளம்பானது பொருந்துதலை உடையவாம்.

இ ஈ எ ஏ ஐ இவ்வைந்தும் வாய் திறத்தலோடு அடிப்பல்லினை அடி நா தடவப் பிறக்கும்.

(வி-ரை) அண்பல் - பல் அண் என்று மாறுக; அண் - அடிப்பகுதி. அ பால் - அவ்வாறு பகுதிப்பட்ட . பால் - பகுதி, கூறு.

சூத்.87 உ ஊ ஒ ஓ ஔ என இசைக்கும்
அப்பால் ஐந்தும் இதழ் குவிந்து இயலும்

(ப-ரை) உ ஊ ஒ ஓ ஔ என இசைக்கும் - உ ஊ ஒ ஓ ஔ என்று கூறப்படும், அ பால் ஐந்தும் - அவை ஐந்தும், இதழ் குவிந்து - இதழ்கள் குவித்துச் சொல்ல, இயலும் - பிறக்கும்.

உ ஊ ஒ ஓ ஔ - இவை ஐந்தும் மேல் கீழ் உதடுகள் குவிதலால் பிறக்கும்

(வி-ரை) இதழ் - மேல் இதழும், கீழ் இதழும். இதழ் - உதடு. குவிதல் - பொருந்துதல். இயலும் - நடக்கும், பிறந்து ஒலிக்கும். அ பால் - அவ்வாறு பகுதிப்பட்ட; அவை என்பதாம்.

சூத். 88 தத்தம் திரிபே சிறிய என்ப

(ப-ரை) தம் தம் திரிபு - (எழுத்துக்கள் கூடிப் பிறந்தாலும்) தத்தம் வேறுபாடுகளை, சிறிய என்ப - சிறிய வேறுபாடுகளே என்று கூறுவர் அறிஞர்.

மேலே கூறப்பட்ட எழுத்துக்கள் ஓரிடத்தில் பிறப்பன என்று கூறப்பட்டாலும், அவற்றுக்குள் சிறிய வேறுபாடுகள் உண்டு என்பர். இவ்வேறுபாடுகள் பொருட்படுத்தப்படுமாறு இல்லை.

(வி-ரை) தம் + தம் - தத்தம். திரிபு - வேறுபாடு. சிறிய - நுட்பமான, பெரிதுபடுத்தத்தேவை இல்லாதவை. இவ்வேறுபாடுகள் உயிர் எழுத்துக்களுக்கு மட்டுமே அன்றிப் பின்வரும் மெய்யெழுத்துக்களின் பிறப்புக்கும் பொருந்தும் என்பது அறிக.

வேறுபாடுகளாவன - எடுத்தல், படுத்தல், நலிதல் என்பவற்றாலும், தலை, நெஞ்சு, கழுத்து, மூக்கு என்ற இடவகையாலும் உண்டாகும் ஒலித்தல் வேறுபாடுகள். இவற்றை நுட்பமாகவே உணர முடியும்.

தொடரும்

# ஓர் இயற்றமிழ் மாணவனின் கல்வெட்டுப் பார்வை - 1

பேரறிஞர் அ.மா. பரிமணம்.

(2001 நவம்பர் இதழ்த் தொடர்ச்சி)

சங்க காலத்தை அடுத்துத் தமிழக அரசியலில் இடம் பெற்ற களப்பிரர்கள் மொழியாலும் பண்பாட்டாலும் மாறுபட்டவர்கள். அவர்களை அடுத்துத் தமிழக ஆட்சியில் இடம்பெற்ற பல்லவர்கள் தொடக்க நிலையில் மொழி, சமயம், பண்பாடு ஆகியவற்றால் வேறுபட்டவர்களாகவும் பின்னர்த் தமிழ்ச் சார்புடையவர்களாகவும் இருந்துள்ளனர். அக்காலத்தில், தமிழ்ச் சைவ-வைணவ சமயங்கள், வைதீக சமயம், சமண - புத்த சமயங்களின் செழிப்பும் சிதைவும் தங்கள் சுவடுகளைத் தமிழகத்தில் பதிக்கலாயின. சாளுக்கியர்களின் தாக்கமும் இடம் பெற்றது. பின்னர் மொழியால் வேறுபட்ட நாயக்கர் ஆட்சி, மொழியாலும் பண்பாட்டாலும் மாறுபட்ட இசுலாமிய - கிறித்துவ, மராட்டிய ஆட்சிகளின் செல்வாக்கும் தாக்கங்களை ஏற்படுத்தலாயின. இந்த இரண்டாயிர ஆண்டு வரலாற்று வழியில், இடைப்பட்ட இராசராசன் கால ஆட்சி சிறந்த ஒன்றாயினும், பிறமொழிப் பண்பாட்டுக் கலப்பிற்கு மிக்க இடந்தந்தமையால் அக்கால வழக்குத் தமிழில் ஏற்பட்ட அவலத்தை அக்காலக் கல்வெட்டுக்கள் 'அறியாதோரையும் அறியக்காட்டித் திங்கட்புத்தேள்' விளங்குமாறு புலப்படுத்தி நிற்கின்றன.

மாமன்னன் இராசராசன் தமிழ்க்குடிமரபில் வந்த தமிழ் வேந்தனாயினும், அரசியற் சார்பால் எழுந்த மணவுறவுகளால் கலப்பு மொழிக்குடும்ப உறுப்பினனாக விளங்கியதனை வரலாற்றினை நுட்பமாக நோக்குவோர் உணரக்கூடும். அதற்கு உதவியாக வரலாற்றாசிரியர் சிலர் கருத்துக்கள் வருமாறு:

திரு.T.A.கோபிநாத ராவ், (சோழவமிசச் சரித்திரச்சுருக்கம்) "இவனுக்குச் சுந்தர சோழன் என்னும் மறுபெயர் ஒன்றிருந்தது. இவன் மனைவி கேரள ராஜன் மகள். இவள் பெயர் வானவன்

மாதேவி. தன் கணவன் பராந்தகன் இறந்ததும் வானவன் மாதேவி ஸ ஹ கமனஞ் செய்தாள்."(பக்.11,12)

திரு.தி.வை. சதாசிவபண்டாரத்தார் (பிற்காலச் சோழர் வரலாறு) "இவனுக்குப் (சுந்தரசோழன்) பராந்தகன் தேவியம்மன் வானவன் மாதேவி என்னும் இரு மனைவியர்கள் இருந்தனர். இவர்களுள் பராந்தகன் தேவிஅம்மன், ஒரு சேரமன்னன் புதல்வி ஆவாள். மற்றொரு மனைவியாகிய வானவன்மாதேவி என்பாள் கோவலூரிலிருந்த மலையமானாட்டுச் சிற்றரசன் மகள்...... குந்தவை என்னும் புதல்வியும் இருந்தனர்... குந்தவைப் பிராட்டி வல்லவரையன் வந்தியத்தேவனுக்கு மணம் செய்து கொடுக்கப்பெற்றனள். அவ்வரச குமாரன் வேங்கி நாட்டில் வாழ்ந்த கீழைச்சாளுக்கிய மரபினனாதல் வேண்டும். (பக்.74, 75)

திருT.A.கோபிநாதராயர் (சோழ வமிசச் சரித்திரச் சுருக்கம்) இராசேந்திர்I- அதனை (வேங்கை நாடு) சாளுக்கிய வம்சத்தனான விமலாதித்தனைப் பிடித்துக் கொண்டு தஞ்சாவூருக்குத் திரும்பினான், விமலாதித்தன் தஞ்சாவூரில் 23 வருசமிருந்து, இராஜராஜனால் அபிமானிக்கப்பட்டு, அவன் மகள் குந்தவையை மணந்து தன்னாடுமளிக்கப்பெற்றுத் திரும்பிச்சென்று 7 வருசம் அரசாண்டான் (பக்.14)

இவற்றால், கேரளம் ஆகிய சேர அரச குடும்பத்தோடும், சாளுக்கிய அரச குடும்பத்தோடும் இராசராசனுடைய தமிழ்க்குடும்பம் மணவுறவுகளால் தொடர்புண்டிருந்ததனை நன்குணரலாம். இதனால் தமிழக மக்கள் வாழ்விலும் ஒருவகையான கலப்பு வாழ்வு நிலை தோன்றியிருத்தல் கூடும். அதன் விளைவுகளில் ஒன்றாகத் தமிழ் மொழி வழக்கில் மொழித் தூய்மையும் செம்மையும் காக்கப்பெறாத மெத்தன உணர்வும், வடமொழி போன்றவற்றை விரும்பி ஏற்கும் உணர்வும் தோன்றியிருத்தல் கூடும். அதனைக் கல்வெட்டுக்கள் மோன மொழியில் உணர்த்தி நிற்கின்றன எனலாம்.

இனி, ஓரியற்றமிழ் மாணவன் பழமையான கற்பொறிப்புக்களில் காணத்தக்க சிலவகைப் பிழைகளுள்

சிலவற்றைக் காணலாம். மொழி முதல் எழுத்துக்கள், இடைநிலை மயக்கங்கள், சொற்புணர்ச்சி போன்றவற்றில் இடம் பெற வேண்டிய விதிகள் போன்றவற்றைத் தொல்காப்பியம் முதல் காலங்கள் தோறும் எழுந்த பல இலக்கண நூல்கள் ஆகியவற்றில் தெளிவாக வரையறை செய்யப்பெற்றுள்ளன. எனினும் அவற்றிற்கு மாறுபட்ட இடங்கள் பல பொறிப்புக்களில் காணப்படுகின்றன. இவை இலிபிகள் தொடர்புடையனவாகா.

*குகைக்கல்வெட்டுக்கள்* - (கல்வெட்டியல் நூலிற் கண்டவாறு) நிலை மொழி ஈற்றில் மெய்யும், வருமொழி முதலில் உயிரும் வந்தால் உடல் மேல் உயிர் வந்து பொருந்தும் என்பது விதி. மாறாக அமைந்தன:-

கடல் அன் (கடலன்) - பக்.49
அர் இதன் (அரிதன்) - பக்.53
பர் அகு (பரசு) - பக்.53

ஒற்றிரட்டாமல் அமைதல்:

கொடு பித (கொடுப்பித்த) - பக்.59
அறு பித கல் (அறுப்பித்த) - பக்.67

மொழிக்கு முதலில் ணகரம் வருதல்:
ணா கன் மகன் ளங்கீரன் (நாகன் மகனிளங்கீரன்) பக்.60

மூன்று அல்லது நான்கு சிறிய வரிகளில், ஸிரி, இகுவன், தம்மம், பளி, ஸூதன், கிரமம், கணி போலும் பல பிராகிருதச் சொற்கள் இடம் பெறல்.

*இடைக்காலக்கல்வெட்டுக்கள்:*

வல்லின றகர ஒற்றிற்குப் பின் க,ச,த,பக்கள் மிகா என்பது விதி. மாறாக:
வடபாற்க்கெல்லை (S.I.I.Vol. 1.No.59, பக்.81)

ந.ற்ப்பாற்க்கெல்லை (மேலது. பக்.88, 89)
விற்க்வும் ஒற்றி வைக்கவும்
தெற்க்கும்
விக்ரம பர்மற்க்கு (S.I.I.Vol. 1.பக்.78)
ராஜகேசரி பந்மற்கு (மேலது. பக்.116)
கேசரி பன்மக்கு (மேலது. எண்.82)
சுரகண்ட்டெசுர சுவாமியாற்க்கு (மேலது. எண்.58)
கல்+தளி = கற்றளி → கற்தளி
என்றும் → எந்றும்
கார்த்திகை அரிசி → காற்திகை அரிசி (மேலது எண்.58)
குருநமசிவாய மூர்த்தி →குருநமசிவாய மூற்த்தி (மேலது. எண்.58)

## 'ந'கரம் பற்றிய பிழைகள்

தமிழில் 'ண', 'ந', 'ன', என்னும் மூன்றெழுத்துக்களும், ஏறத்தாழ ஒரே ஒலி வகை உடையனவாகும்; மூன்றுமே மெல்லின வகை சார்ந்தன. இவற்றுள் வேறுபாடறிய முன் அடுத்து அமையும் எழுத்தினை நோக்கி டண்ணகரம், தந்நகரம், றன்னகரம் என்றும் குறிப்பிடப் பெறும். சொற்களில் வருங்கால் ணகரத்தை ஒலிப்பதில் பொதுவாக வேறுபாடு தோன்றுவதில்லை. ஆனால் ஏனைய இரு எழுத்துக்களையும் ஒலிப்பதிலும், எழுதுவதிலும் வேறுபாடு தோன்றும் வாய்ப்புளது. 'ன' என்னும் எழுத்து வடமொழியில் இன்மையால் அதனை நகரத்தால் குறிப்பிடுவதுண்டு. தமிழ் இலக்கணிகள் இதனை உளத்திற் கொண்டு இவற்றிற்கான பயன்பாட்டு விதிகளைத் தம் நூல்களில் தெளிவுபடுத்தியுள்ளனர். அண்மைச் சுட்டாகிய இகரம் நகர முதன் மொழி வருங்கால் இந்நகரம் என அமையும். ஏனைய ணகரமும், னகரமும் வருமொழி முதல் எழுத்துக்களாக அமையமாட்டா. கல்வெட்டுக்களில் இந்த நியதி மீறப்பெற்று வேறு வகையாகப் பொறிக்கப் பெற்றுள்ளதனைக் காணலாம்.

இ + நகரத்து – இந்நகரத்து என்பது சரியானவடிவம் (S.I.I. Vol.I எண் 65 வரி 26)

இன் நகரத்து என்றும், இன்னகரத்து என்றும் அதே கல்வெட்டில் இடம் பெற்றுள்ளன (வரி 18, 60)

இ+நாயனார் - இந்நாயனார் →இன்னாயனார் (S.I.I. Vol.I பக் 192)

இன்னாயனார்க்கு - (மேலது பக்.69)

அகிதம் பண்ணி நா (னா) ருண்டானால் (மேலது 79)

பொந்துளை நிறை (பொன்) Vol.I பக்.146

மந்ற (மன்ற)

தன்நெழில் வளரூழி (தன் எழில் வளர் ஊழி)

யாண்டு பந்நிரண்டாவது (பன்னிரண்டாவது) Vol.I No.146

முன் நோரன் (முன்னோன்) } S.I.I. Vol. III. பக். 305.

பின்நதாக (பின்னதாக) } S.I.I. Vol. III. பக். 305.

வன்தெதிர்த்த (வந்தெதிர்த்த)

ஏனை மந்னவர் (மன்னவர்)

வாழ்வோமாநோம் (வாழ்வோமானோம்)

மநையும் மநெப்படப்பும் (மனையும் மனைப் படப்பும்)

ளகரத்தில் :

சூளை மேட்டுப்பட்டி } இரு வடிவங்களும் ஒரே கல்வெட்டில்

சூளெ மேட்டுபட்டி } இரு வடிவங்களும் ஒரே கல்வெட்டில்

விளெ நிலமாகவும் - (விளைநிலமாகவும்)

விலெக் காணங் கையிக்கொடுத்து - விலைக் காணங் கையிற்கொடுத்து S.I.I. Vol. I. No.58

கல், நெல் :

கல்லு வெட்டிக் கொள்க வெந்று - (கல்லில் வெட்டிக் கொள்க வென்று)

நெல்லு

பிழைபட்ட சொல் :

மதிரை (மதுரை) கொண்ட கோப்பர கேசரி பன்மக்கு

அவனானையும் குருதையும் (குதிரை)

திருவாலன் - (திருவாளன்)

தேவர் கு (தேவர்க்கு) Vol.I பக்.119

கெங்கை கரயில் - (கங்கைக் கரையில்) மேலது பக்.60

செக்கனூர் கிறாமம் (கிராமம்) Vol.I எண்.50

மட தற்மத்துக்கு (மடத்தர்மத்துக்கு) Vol.I எண்.58

திருவெளறை (திருவெள்ளறை)

புணர்ச்சிப்பிழை - கால்பு பொன்னும்

ஒன்றில்த் தடவிக் கட்டின. (தஞ்சைப் பெருவுடையார் கோயில் கல்வெட்டுக்கள் பகுதி.1 பக்.5.

அயிதம் பண்ணினார் (அகுதம் பண்ணினார்) S.I.I. Vol.I No.58. பக்.85)

சத்துரும் மல்லன் (சத்ருமல்லன்)

அய்ம் பத்திரண்டாவது (ஐம்பத்திரண்டாவது) S.I.I. Vol.I பக்.108

கய்க்கொண்டு (கைக்கொண்டு) S.I.I. Vol.III பக்.54

ஆண்டு அஞ்சாவது (ஐந்தாவது) மேலது பக்.305

அயிந்து (ஐந்து) S.I.I. Vol.III பக்.527

ஐய்யமறக்கொண்டு (ஐயமறக்கொண்டு) S.I.I. Vol.I பக் 40

வேதம் வல்லவர்க்கு அவர்களின் கல்வித் தரமறிந்து சிறப்புச் செய்யப்படும். நான்கு வேதங்களில் வல்லவர்கள் சதுர்வேதி என்றும், மூன்று வேதங்களில் வல்லவர்கள் திரிவேதி என்றும், இரண்டு வேதங்களில் வல்லவர்கள் துவிவேதி என்றும் கூறப்படுவர். திரிவேதி என்பது சில கல்வெட்டுக்களில் திருவேதி என்றே வழங்கப்பட்டுள்ளது. (S.I.I. Vol.I No.99) தஞ்சை மாவட்டத் திருவையாற்றிற்கு அருகில் திருவேதிகுடி என்றொரு சிவத்தலம் உள்ளது. அதில் இடம் பெறுவது 'திரு' என்னும் அடை மொழியாகும். ஸ்ரீ என்பதற்கு நேரான தமிழ்ச்சொல்லாய்த் தலப்பெயருக்கு முன்னர் அடையாக அமைந்தது அச்சொல். கல்வெட்டில் திருவேதி என்பதில் 'திரி' என்பதன் திரிந்த வடிவமாகும்.

ஆறு அங்கங்களுணர்ந்த அந்தணர் 'ஷடங்கவி' எனப்படுவர், சோமயாகம் செய்து சிறந்த அந்தணர்கள் 'சோமயாஜி' எனப்படுவர் சதுர்வேதி என்பதில் சதுர் என்பதனைக் கிரந்த எழுத்தில் குறிப்பிடும் தண்டந்தோட்டச்

செப்பேடுகள், சோமாசி, சடங்கவி எனத் தமிழ் எழுத்துக்களில் குறிப்பிட்டுள்ளன. (S.I.I. Vol.II பக்.523) சேக்கிழார் தம் திருத்தொண்டர் புராணத்தில் தாம் பின்பற்றும் தமிழிலக்கண மரபுப்படி, சடங்கவி என்றும், சோமாசி என்றுமே குறிப்பிட்டுள்ளார். "வந்ததொல் சிறப்பிற் புத்தூர்ச் சடங்கவி மறையோன்" (பெ.பு.தடுத்தாள் 7) "சொல்லார் சீர்ச் சோமாசி மாறர்" (பெ.பு. மூர்க்க நாயனார் 12) என்பன சேக்கிழார் வாக்குக்கள்.

இவ்வாறெல்லாம் பல்வேறு வகைகளில் கற்பொறிப்புகளில் இடம்பெற்றுள்ள எழுத்து, சொல், தொடர்களில் காணப்படும் பிழைகள் காரணமாகக் கல்வெட்டினைப் புரிந்து கொண்டு அதற்கிணங்கச் செயற்படுவதில் அக்காலத்தவர் தவறுபடவில்லை. இதனை ஒரு கல்வெட்டுப் பகுதியே உணர்த்துவது மிக்க ஆறுதலளிப்பதாக உள்ளது. அப்பகுதி வருமாறு.

"இந்த (சாசனத்திற்கு) எழுத்துப்பிழை வாசகப்பிழை காட்டு எற்று என்று சொல்லப்பெறா / இவை சடகோப நம்பி கோவிந்தன் எழுத்து / இப்படிக்கு இவர் சொல்ல இந்த விலை கணக்கு திருநின்ற ஊருடையான் எழுத்து" (இதற்கு எழுதப்பட்டுள்ள ஆங்கிலக்குறிப்பு வருமாறு.

We agree not to point to omissions of letters or omissions clauses (conditions) and thereby demand (a fresh) presentation and registration of the சிலாசாசனம்). (Early inscriptions Vol .I-by S.Subramaniya Sastry / Pag.198/ No.204 (No.185.TT) on the north wall (outside of the kitchen in the first prakara of Tirumala Temple)

- தொடரும்

# மதுரைக்கோயில் கல்வெட்டுகள்

பேரறிஞர் வெ. வேதாசலம்

பண்டைத்தமிழ் இலக்கியங்களான புறநானூறு, பரிபாடல் முதலியவற்றின் மூலம் மதுரையில் சிவன்கோயில் ஒன்று இருந்துள்ளதை அறியமுடிகிறது. அங்கையற்கண்ணியோடு அமர்ந்த ஆலவாய் இறைவன் கோயில் பற்றி மேலும் தெளிவான சான்றுகள் ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த திருஞானசம்பந்தர் திருப்பதிகங்களில் கிடைக்கின்றன. சம்பந்தர் தமது மதுரைக்கோயில் பதிகத்தில் மதில்சூழ்ந்த கட்டடக் கோயிலாகத் திருவாலவாயுடையார் கோயில் திகழ்ந்தது என்று குறிப்பிடுகிறார். அதன்பிறகு தொடர்ந்து முற்காலப்பாண்டியர், சோழர், இடைக்கால-பிற்காலப்பண்டியர், மதுரை நாயக்கர் காலங்களில் பல்வேறு வளர்ச்சியை இக்கோயில் கண்டு வந்திருக்கிறது. முற்காலப்பாண்டியர் காலத்தினைச் சார்ந்த கி.பி.9-10ஆம் நூற்றாண்டுச் சிற்பங்கள் மதுரைக் கோயிலில் காணப்படுகின்றன. ஆனால் கல்வெட்டுக்களைப் பொறுத்தவரை கி.பி.12ஆம் நூற்றாண்டின் இறுதியிலிருந்து பொறிக்கப்பட்ட கல்வெட்டுக்களே இக்கோயிலில் தற்போது உள்ளன.

## *மூன்றாம் குலோத்துங்கன் கல்வெட்டு*

முற்காலப்பாண்டியர், சோழர், இடைக்காலப்பாண்டியர் காலங்களைச் சார்ந்த கல்வெட்டுகள் எதுவும் இன்றுவரை இக்கோயிலில் கண்டறியப்படவில்லை. கி.பி.12ஆம் நூற்றாண்டின் இறுதியில் மதுரையின்மீது படையெடுத்து வந்த மூன்றாம் குலோத்துங்கசோழனின் வேற்றூர்களில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டுகளில் மெய்க்கீர்த்திப் பகுதியில் மதுரைக் கோயில்

குறிப்பிடப்படுகிறது. இது மதுரைக்கோயில் குறித்துக் கிடைக்கும் பழங்கல்வெட்டுக் குறிப்புகளில் ஒன்றாகும். இக்கல்வெட்டு மூலம் மதுரைக்கோயில் நல்லநிலையில் இருந்ததை அறியமுடிகிறது. மூன்றாம் குலோத்துங்கன் கி.பி.1202-03 அளவில் பாண்டியனை வென்று மதுரையில் வீராபிசேகமும் விசயாபிசேகமும் செய்துகொண்டான்.[1] இதனைத் தெரிவிக்கும் இவனது மெய்க்கீர்த்தி மதுரைக்கோயிலில் இவன் செய்த சமயப்பணிகளைக் குறிப்பிடுகிறது. குலோத்துங்க சோழன் திருவாலவாயில் அமர்ந்தவர் கோயிலைச் சுற்றித் தன் பெயரால் திருவீதியை அமைத்தான். சிறப்பு வழிபாடு செய்யத் திருநாளும் கண்டருளினான். முப்புரம் எரித்த சொக்கர் திருவீதிவுலா வர ஏற்பாடு செய்தான். தன்னைப் பேரரசன் என்றும் கருதாமல் அத்திருவீதியுலாவைத் தெருவீதியில் நின்று கண்டுகளித்தான். சொக்கரைச் சேவித்து மகிழ்ந்தான். மேலும் திருவாலவாயுடையார் கோயிலைப் பொன்மலை என்று சொல்லும்படிப் பொன்வேய்ந்து மகிழ்ந்தான். இதனை,

> "அறந்தருதிரு வாலவாயில் அமர்ந்தவர்க்குத் தன்பேரால்
> சிறந்தபெருந் திருவீதியும் திருநாளும் கண்டருளிப்
> பொருப்புநெடுஞ் சிலையால்முப் புரமெரித்த சொக்கருக்குத்
> திருப்பவனி கண்டருளித் திருவீதியில் சேவித்துத்
> தென்மதுரைத் திருவாலவாய் பொன்மலையெனப்
> பொன்வேய்ந்து"

என்று குலோத்துங்கசோழனின் புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன.[2]

மூன்றாம் குலோத்துங்கனுக்கு முன்னர் ஆட்சிபுரிந்த மன்னர்களின் கல்வெட்டுகள் மதுரைக் கோயிலில் காணப்படாமைக்குக் காரணங்கள் பல இருக்க வேண்டும். பிற்காலத்தில் மதுரையின்மீது ஏற்பட்ட படையெடுப்புக்களினால்

கல்வெட்டுகள் பொறிக்கப்பட்ட கட்டடங்கள் அழிவுக்குள்ளாகி இருக்கலாம். மேலும் மதுரை நாயக்க மன்னர்கள் இக்கோயிலின் கருவறை முதலாக விரிவுபடுத்திப் பல மண்டபங்களையும் இங்குக் கட்டியபோது பழங்கல்வெட்டுகள் இடம் பெயர்ந்து மறைந்திருக்க வேண்டுமெனத் தோன்றுகிறது. இக்கோயிலையும் சுற்றுப்புறத்தையும் மேலும் நன்கு ஆய்வு செய்தால் பழங்கல்வெட்டுகள் வெளிப்பட வாய்ப்புள்ளது.

## *மதுரைக்கோயில் கல்வெட்டுகள்*

மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் மதுரையில் ஆட்சி புரிந்த சடையவர்கள் குலசேகரபாண்டியன் (கி.பி.1190-1216) காலத்திலிருந்து ஆங்கிலேயர் காலம் வரை பொறிக்கப்பட்ட அறுபத்து நான்கு கல்வெட்டுகள் மதுரைக் கோயிலில் இதுவரை படியெடுக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன. காலமுறைப்படி இவற்றின் எண்ணிக்கை பின்வரும் முறையில் அமைந்துள்ளன.

| | |
|---|---|
| 1. பிற்காலப்பாண்டியர் காலம் (கி.பி.1190-1343) | - 44 கல்வெட்டுகள் |
| 2. விசயநகர, மதுரை நாயக்கர் காலம் (கி.பி.1500-1736) | - 19 கல்வெட்டுகள் |
| 3. ஆங்கிலேயர் காலம் | - 1 கல்வெட்டு |
| மொத்தம் | 64 கல்வெட்டுகள் |

## *கல்வெட்டில் காணும் மன்னர்கள்*

பிற்காலப்பாண்டிய மன்னர்களில் முதலாம் சடையவர்மன் குலசேகரபாண்டியனின் நான்காம் ஆட்சியாண்டு (கி.பி.1194) கல்வெட்டு மதுரைக்கோயிலில் காணப்படும் கல்வெட்டுகளில் பழமையானதாகும். இவனைத்தொடர்ந்து கி.பி.13ஆம் நூற்றாண்டில் ஆட்சிபுரிந்த முதலாம் மாறவர்மன்

சுந்தரபாண்டியன் (கி.பி.1216-1244) இரண்டாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் (கி.பி.1238-1255) இரண்டாம் மாறவர்மன் விக்ரமபாண்டியன் (கி.பி.1250-1276) முதலாம் மாறவர்மன் குலசேகரபாண்டியன் (கி.பி.1268-1318) ஆகியோரது கல்வெட்டுகள் உள்ளன. கி.பி.14ஆம் நூற்றாண்டில் ஆட்சிபுரிந்த மூன்றாம் சடையவர்மன் வீரபாண்டியன் (கி.பி.1315-1334) பராக்கிரம பாண்டியன் ஆகியோரது கல்வெட்டுகளும் காணப்படுகின்றன. பாண்டியர் கல்வெட்டுகளில் இரண்டாம் மாறவர்மன் சுந்தரபாண்டியனின் காலத்துக் கல்வெட்டுகளே எண்ணிக்கையில் அதிக அளவில் இருக்கின்றன. இது இவனது காலத்தில் மதுரைக்கோயில் பல அறப்பணிகளைக் கண்டு பெருவளர்ச்சி அடைந்துள்ளது என்பதைக் காட்டுகிறது.

விசயநகர வேந்தர்களில் கிருஷ்ணதேவராயர் (கி.பி.1509-1529) அச்சுததேவராயர் (கி.பி.1529-1542) சதாசிவராயர் (கி.பி.1542-1570) ஆகியோரின் கல்வெட்டுகள் மதுரைக்கோயிலில் பொறிக்கப்பட்டுள்ளன. மதுரைநாயக்க மன்னர்களில் வீரப்பநாயக்கர் (கி.பி.1572-95) குமாரகிருஷ்ணப்பநாயக்கர் (கி.பி.1595-1601) முத்துவீரப்பநாயக்கர் (கி.பி.1609-23) திருமலைநாயக்கர் (கி.பி.1623-1659) விசயரங்க சொக்கநாத நாயக்கர் (கி.பி.1706-32) ஆகியோரது கல்வெட்டுகளும் காணப்படுகின்றன. இவைதவிர கி.பி.1842ல் பொறிக்கப்பட்ட ஆங்கிலேயர்காலத்துக் கல்வெட்டு ஒன்றும் அங்கயற்கண்ணி ஆலயத்தில் உள்ளது.

## *கல்வெட்டு காட்டும் அறக்கொடைகள்*

பிற்காலப்பாண்டியர், நாயக்கர்காலக் கல்வெட்டுகள் கோயிலுக்கு அளிக்கப்பட்ட பல்வேறு பொருள்கொடைகளையும்

நிலக்கொடைகளையும் பற்றித் தெரிவிக்கின்றன. இவை கோயிலில் அன்றாடம் நடைபெறும் வழிபாட்டிற்காகவும் திங்கள், ஆண்டு விழாக்களுக்காகவும் அளிக்கப்பட்டவை ஆகும். மேலும் மதுரைக்கோயிலில் நடைபெற்ற திருப்பணிகள், கட்டுமானங்கள் குறித்தும் கல்வெட்டுகள் மூலம் அறியமுடிகிறது. மதுரைக்கோயில் இறைவன் திருவாலவாயுடையநாயனார் என்றும் இறைவி திருக்காமகோட்டமுடைய நாச்சியார் என்றும் பிற்காலப்பாண்டியர் கல்வெட்டுகளில் குறிப்பிடப்படுகின்றனர்[3] விரதமுடித்த ஈஸ்வரர், வாதுசெய்தவாரணமுடையார் (திருஞான சம்பந்தர்) கோயில் போன்ற சிற்றாலயங்களின் பெயர்கள் கல்வெட்டுகளில் குறிப்பிடப்படுகின்றன.[4]

## *பிற்காலப் பாண்டியர் காலம் (கி.பி.1190-1343)*

கோயிலில் இரவும் பகலும் புறவிருளை அகற்றத் திருவிளக்குகள் எரிப்பதற்காகத் தானங்கள் வழங்கப்பட்டுள்ளன. திருவாலவாயுடையார் கருவறையில் வெளிப்புற வாயிலில் இரண்டு நிலைவிளக்குகள் வைத்து எரிப்பதற்காகச் சடையவர்மன் குலசேகர பாண்டியனின் 'அகப்பரிவார முதலி' என்றழைக்கப்பட்ட அதிகாரி ஒருவன் இருபது பொற்காசுகளைக் கோயிலுக்குக் கொடுத்துள்ளான்.[5] இதுபோன்று கோயிலுக்குத் திருவிளக்கு எரிப்பதற்காகப் பொன் தானமாக மாறவர்மன் சுந்தரபாண்டியன் காலத்தில் தரப்பட்டிருக்கிறது.[6]

கோயிலில் சிறப்புச்சந்தியின்போது இறைவன் முன்னர் திருப்பதியம் பாடுவதற்குச் செண்டாடுவானான உத்தமபாண்டியப் பிச்சனுக்கு ஊதியம் வழங்கப்பட்டுள்ளது.[7] இரண்டாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் காலத்தில் அருளாளதேவனான வானாதிராயன் கண்ட சிறப்புச்சந்திக்கு வெண்பைக்குடிநாட்டு

நம்பிதாயநல்லூர் தானமாகத் தரப்பட்டது. மார்கழித்திருநாளில் திருவெம்பாவை பாடுகின்ற பரதேசி கோவணவர்க்கு உணவு வழங்கப்பட்டது. மேலும் ஆலவாயுடையார் உலாவந்து திருக்காமக்கோட்டத்தின் (மீனாட்சியம்மன் சன்னதி) தெற்குவாசலான வாணாதிராயன் வாசலில் வந்து நிற்கும்போது இறைவன் கேட்கும்படியாக அவ்விடத்தில் சதாரிப்பண் பாடவும் ஏற்பாடு செய்யப்பட்டது.[8] இப்பண் மதுரையில் திருவால வாயுடையார் விறகுவெட்டியாக வந்து சேமநாதனின் இசைச்செருக்கு அழியப் பாணபத்திரனுக்காகப் பாடிய பாடலின் பண்ணாகும் என்று மதுரை திருவிளையாடல் புராணம் கூறுகிறது. மதுரைக்கோயிலில் திருப்பதியம் பாடித் திருத்தொண்டு செய்துவந்த இசைவாணர்க்கு நிலக்கொடைகள் அளிக்கப் பட்டுள்ளன.[9]

கருநிலக்குடி நாட்டிலுள்ள குண்டூரான குலசேகரமங்கலம் என்ற ஊரில் இறையிலியாகச் சில நிலங்கள் இறைவன்மீது பூசுவதற்காகும் வாசனைத்தைலம் அளிப்பதற்காகத் தரப்பட்டுள்ளன.[10] இறைவனது மேனியில் பூசும் சந்தனம் கொண்டுவந்து தருவதற்காக அண்டநாட்டிலுள்ள துருமூர் நிலங்களின் வரிகளிலிருந்து வந்த நான்கு பொற்காசுகள் தானமாகக் கோயிலுக்குக் கொடுக்கப்பட்டுள்ளன.[11] இரண்டாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் காலத்தில் போசளமன்னன் வீரசோமீசுவரன் பெயரால் அவன் பிறந்தநாளான ஐப்பசித் திங்கள் மகநாளில் அவன் பெயரால் திருவாலவாயுடையார்க்குச் சிறப்புவழிபாட்டுச் சந்தி ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டது. அதற்காகப் பலவூர்களில் வரிநீக்கிய நிலங்கள் இறையிலியாகக் கொடுக்கப்பட்டன.[12] திருவாலவாயுடையார் கோயிலில் எனக்கு நல்லபெருமாள் அண்ணன் தமிழ்ப்பல்லவரையன் என்பவனால்

திருச்சின்னப்பணி செய்வதற்காகப் பணியாளர்களுக்குச் சீவிதமாக இறையிலி நிலமளிக்கப்பட்டது. அவற்றிலிருந்து வரியாக வந்த இரண்டு பொற்காசுகளைப் பெற்று இவர்கள் பணிசெய்து வந்தனர்.[13]

கோயிலில் மடைப்பள்ளிக்கு ஆகும் செலவிற்காக அடுக்களைப்புறம் என்ற பெயரில் நிலங்கள் இறையிலியாகக் கொடுக்கப்பட்டுள்ளன. மாதேவன் அழகியசொக்கனார் என்பவனுக்கு முடித்தலைக்கொண்ட பாண்டிய சதுர்வேதி மங்கலத்தினைச் சார்ந்த மாத்தூர் நிலங்கள் சில காராண்மைக் காணியாக அடுக்களைப்புறம் என்ற பெயரில் அளிக்கப்பட்டன[14] அண்டநாட்டு மருத்துவக்குடி என்ற ஊரைச் சார்ந்த திருநட்டப் பெருமாள் என்ற பிராமணருக்குத் திருவாலவாயுடையார் கோயில் மடைப்பள்ளியில் அடுவானாகப் பணிபுரிவதற்கு இறையிலியாகப் பராந்தகப்பாண்டியச் சதுர்வேதிமங்கலம் என்ற ஊரிலிருந்து சில நிலங்கள் மானியமாகக் கொடுக்கப்பட்டன.[15] இதேபோன்று இராசநந்தனான முனையதரையன் என்பவனுக்குப் பருத்திக்குடிநாட்டு கோடிக்காவல்நல்லூரில் அடுக்களைப் புறமாக நிலங்கள் வழங்கப்பட்டன.[16] கோயிலில் பல்வேறு பணிசெய்த பிறருக்கும் நிலக்கொடை தரப்பட்டுள்ளதையும் பிற்காலப்பாண்டியர் கல்வெட்டுகள் உணர்த்துகின்றன.[17]

கோயிலில் வழிபாட்டிற்காகப் பூக்களைப் பெறுவதற்கான நந்தவனங்கள் தோற்றுவிப்பதற்கு நிலங்கள் அளிக்கப்பட்ட - தையும் பிற்காலப் பாண்டியர்காலக் கல்வெட்டுகள் உணர்த்துகின்றன.[18] சிற்றாலயம், மண்டபம், கோபுரம் போன்ற கோயிற்பகுதிகளைக் கட்டியதைப் பற்றியும் சில கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. இரண்டாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன்

காலத்தில் விதி விரதமுடித்த ஈஸ்வரமுடையார் என்ற பெயரில் ஈசுவரம் ஒன்று மதுரைக்கோயிலினுள்ளே கட்டப்பட்டுள்ளது.[19] இக்காலத்திலேயே அருளாளன் சேவகத்தேவனான வாணாதிராயன் என்பவன் அதிர வீசியாடுவாருக்காகத் திருமண்டபம் (நடராசர் சன்னதி) ஒன்றைக் கட்டுவித்துள்ளார். இவனே திருவாலவாயுடையார் கோயிலைச்சுற்றித் திருநடை மாளிகையையும் எடுப்பித்துள்ளான். மதுரைக்கோயிலில் திருத்தேரினைப் புதுப்பித்து எழுநிலைக்கோபுரத்திற்கும் திருப்பணி செய்வித்திருக்கின்றான். இதற்காக இவனால் ஆண்மர் நாட்டிலுள்ள சோழபாண்டியநல்லூர் என்ற ஊர் தானமாக வழங்கப்பட்டுள்ளது.[20]

மதுரைக்கோயிலின் கிழக்குக்கோபுரம் முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் காலத்தில் தோற்றுவிக்கப்பட்டுப் பலமுறை திருப்பணிகள் பிற்காலப்பாண்டியர் காலத்திலேயே செய்விக்கப்பட்டுள்ளன. நான்காம் சடையவர்மன் சுந்தரபாண்டியன் (கி.பி.1303-1325) காலத்தில் இது திருப்பணி செய்து திருத்திக் கட்டப்பட்டது. இதனை உறுதிப்படுத்தும் வகையில் கிழக்குக்கோபுர வாசலின் உட்புறம் 'அவனி வேந்தராமன்', 'சுந்தரபாண்டியன்' என்ற அவனது பெயர்கள் கல்வெட்டாகப் பொறிக்கப்பட்டுள்ளன.[21] மேற்கு வாயிலிலுள்ள பெருங்கோபுரத்தினைப் பராக்கிரமபாண்டியன் (கி.பி.1315-1334) என்ற பாண்டியமன்னன் கட்டுவித்தான் என்பதை அதனடியில் பொறிக்கப்பட்டுள்ள பாடல் கல்வெட்டுகள் உறுதிப் படுத்துகின்றன.[22]

மதுரைக்கோயில் கல்வெட்டுகளில் மதுரையிலிருந்த சைவ மடங்கள் பல குறிப்பிடப்படுகின்றன. இவற்றை அமைப்பதற்கும் நடத்துவதற்கும் இவற்றிலிருந்து உணவுதானம்

வழங்குவதற்கும் கொடைகள் தரப்பட்டுள்ளன. மாறவர்மன் சுந்தரபாண்டியன் காலத்தில் மதுரையிலிருந்த சுந்தரபாண்டியன் திருமடத்தில் தபசியருக்கு உணவளிக்க நிலங்கள் தானமாகத் தரப்பட்டுள்ளன.[23] மாறவர்மன் குலசேகரபாண்டியன் காலத்தில் மதுரையிலிருந்த 'நரலோகசூரியன் திருமடம்' என்ற மடத்தில் மகேசுவரர்க்கு உணவளிப்பதற்காகப் பாகனூர் கூற்றத்தில் இருந்த நிலங்கள் தானமாகக் கொடுக்கப்பட்டுள்ளன.[24] மதுரையிலிருந்த சைவமடங்களில் சிறப்புவாய்ந்த மடங்களில் ஒன்றாகத் 'திருஞானசம்பந்தன்மடம்' கல்வெட்டுகளில் குறிப்பிடப் படுகின்றது.[25] இதுதவிர புவனேகவீரன்மடம், தெற்கில்மடம். மானம்பெரியான்மடம் என்ற பெயரில் அமைந்த சைவமடங்களும் மதுரையில் இருந்திருக்கின்றன.[26] புவனேக வீரன்மடத்தில் ஆவணித்திருநாளின்போது ஒவ்வொரு நாளிலும் நூறுபேர் வீதம் பத்துநாட்கள் ஆயிரம்பேருக்கு உணவு வழங்கப்பட்டுள்ளது.[27]

போசளமன்னன் வீரசோமேசுவரனால் நின்றியங்கிடுவார் என்ற பிச்சாடத்துச் சந்தானம் கேட்டுக் கொண்டபடி கோசாலைமடம் ஒன்று அமைக்கப்பட்டது. இதற்காக நிலங்கள் திருவேடகத்திலும் பறப்புநாட்டு இடைக்குடியிலும் அளிக்கப்பட்டன. மதுரைக்கோயிலுக்கு முப்பது பசுக்கள் அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டது.[28]

இளையான்குடியிலுள்ள முதலாம்மாறவர்மன் குலசேகரபாண்டியன் கல்வெட்டு ஒன்றும் மதுரைக்கோயில் பற்றிச் சில புதிய செய்திகளைத் தருகின்றன. இம்மன்னனின் அதிகாரியாக விளங்கிய இளையான்குடியைச் சார்ந்த கங்கைகொண்ட சூரியதேவன் வாணாதிராயரான காலிங்கராயன்

என்பவன் திருவாலவாயுடைய நாயனார் திருநாட்களில் வைகையில் தீர்த்தம் ஆடியருள வைகைக்கரையில் காலிங்கராயன் என்ற தனது பெயரில் மண்டபம் ஒன்றைக் கட்டுவித்துள்ளான் என்று இளையான்குடி பெருமாள்கோயில் கல்வெட்டுத் தெரிவிக்கிறது.[29] மேலும் இவன் மதுரைக்கோயிலில் தன் பெயரால் சூரியதேவரையும் ஈசுவரவுடையாரையும் தனது மனைவியர் பெயரால் திருவுடையநாச்சியாரையும் பிரதிட்டை செய்தான் என்று இக்கல்வெட்டு குறிப்பிடுகிறது.

## *நாயக்கர்காலம் (கி.பி. 1500-1736)*

நாயக்கர்காலக் கல்வெட்டுகளில் இக்கோயில் சொக்கநாத சுவாமிகோயில் என்று குறிப்பிடப்படுகிறது.[30] அங்கயற் கண்ணிக்கு மீனாட்சியம்மன் என்ற பெயர் இக்காலத்திலிருந்து வழங்கப்பட்டிருக்கிறது. பிற்காலப்பாண்டியர் காலத்திற்குப் பிறகு மதுரைக்கோயிலின் வளர்ச்சியில் சிறிதுகாலம் பின்னடைவு ஏற்பட்டதைக் கல்வெட்டுக்கள் உணர்த்துகின்றன. மீண்டும் பதினைந்தாம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து மதுரைக் கோயில் பெருவளர்ச்சி கண்டது. இதற்குக் காரணமாக மதுரைநாயக்க மன்னர்கள் திகழ்ந்தனர். விசயநகரவேந்தர்களும் இவர்களோடு இணைந்து பல கோபுரங்கள், மண்டபங்கள் எழுப்பி வழிபாட்டிற்குப் பல தானங்களை அளித்திருக்கின்றனர் என்பதைக் கல்வெட்டுகள் புலப்படுத்துகின்றன.

கிருட்டிணதேவராயரின் முயற்சியில் அவரது அதிகாரியாக விளங்கிய சாளுவநரசநாயக்கர் என்பவன் மதுரையில் இராசகோபுரத்திற்கு அருகே எழுகடல் குளத்தினை கி.பி.1516ல் தோற்றுவித்துள்ளான்.[31] இது கல்வெட்டில் 'சப்தசாகரத்தீர்த்தம்' என்று குறிப்பிடப்படுகிறது. மதுரைக்

கோயிலில் கம்பத்தடி மண்டபத்தினைச் சூழ்ந்துள்ள வீரபத்திரர், காளி, உருத்திரதாண்டவர் ஆகியோர் சிற்பங்கள் அடங்கிய பெருமண்டபத்தினை கி.பி.1583ல் வீரப்பநாயக்கன் கட்டுவித்துள்ளான். இதனை அம்மண்டபத்திலுள்ள தூண் ஒன்றில் தெலுங்கு, தமிழ் மொழிகளில் அமைந்த கல்வெட்டு ஒன்று தெரிவிக்கிறது.[32] சுவாமிசன்னதிக்கு முன்பாக அமைந்துள்ள சிறு கோபுரத்தினை அச்சுததேவராயர்க்குப் (கி.பி.1529-92) புண்ணியமாக விசுவப்பநாயக்கர், ஈசுரப்பநாயக்கர் போன்றவர்கள் சேர்ந்து எடுப்பித்துள்ளனர்.[33]

கோயில் வழிபாட்டிற்கும் கோயில் பணியாளர்களுக்கும் நாயக்கர் காலத்தில் பலவூர்கள் தானமாகத் தரப்பட்டிருக்கின்றன.[34] விட்டலதேவ மகாராசர்க்குப் புண்ணியமாகத் தென்களவழிநாட்டுக் கணக்கன்குடியைச் சார்ந்த பாடிஏந்தல் என்ற ஊர் தானமாகத் தரப்பட்டுள்ளது.[35] இதன் வருவாயிலிருந்து கோயிலுக்கு மாலைகள் வழங்கப்பட்டன. திருமலைநாயக்கருப் புண்ணியமாக மார்கழித்திருநாள் கொண்டாட சில வரிகள் கோயிலுக்குக் கொடுக்கப்பட்டன.[36] கோயிலில் ஸ்ரீபாதம்தாங்குவார்க்கு ஊதியமாகப் பல ஊர்களின் வரிகள் பலமுறை தானமாக அளிக்கப்பட்டன.[37] உத்திரமேரூர் மகிபாலகுலகாலச் சேரியைச் சார்ந்த நரசய்யர் என்பவரால் கி.பி.1514ல் திருவிழாக்காலங்களில் சுவாமியைத் தூக்கிச் செல்வதற்கு ஐநூறுபொன் தானமாகத் தரப்பட்டுள்ளது.[38] நாயக்கர் காலத்தில் வாழ்ந்த வெற்றிலை பயிரிடுவோர்க்கு விதித்த வரிகளைப்பற்றியும் அவர்களுக்குரிய கடமைகள் பற்றியும் சில கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன.[39]

மதுரையில் கி.பி.1547ல் ஞானக்கூத்தர் என்பவரின் தலைமையில் இயங்கிய மடத்திற்காக நிலம் விடப்பட்டுள்ளது.[40]

மதுரைக்கோயிலில் கி.பி.1710ல் விசயரெங்க சொக்கநாதநாயக்கர் தற்பலி ஒன்று நிகழ்ந்துள்ளது. மதுரைக்கோயிலுக்கு உரிமையுடைய கோயில் நிலங்களிலிருந்து வழக்கத்திற்கு மாறாக அதிக வரிகளை வாங்கி அதிகாரிகள் சிலர் துன்புறுத்திய செயலைக் கண்டித்து இப்பலி நடைபெற்றுள்ளது. இதற்காக மதுரைக்கோயிலில் பணிபுரிந்த பணியாளன் ஒருவன் கிழக்குக் கோபுரத்தின் மீதேறி கீழே விழுந்து உயிர்துறந்தான் என்று அங்குள்ள கல்வெட்டு ஒன்று தெரிவிக்கிறது.

ஆங்கிலேயர் காலம்

ஆங்கிலேயர் காலத்தில் கி.பி.1842ல் பொறிக்கப்பட்ட கல்வெட்டு ஒன்று கோயிலில் பழைய சாத்திரம் (சட்டம்) சொல்லித் தருவதற்கும் ஆங்கிலம் பயில்விப்பதற்கும் ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டதைத் தெரிக்கிறது. இங்குப் பணிபுரிந்த ஆசிரியர்களுக்கு ஊதியம் காஞ்சிபுரம் வள்ளல் பச்சைப்ப முதலியாரால் வழங்கப்பட்ட ஒருலட்சம் பக்கோடா பணத்திலிருந்து வரும் வட்டியைக் கொண்டு அளிக்கப் பட்டிருக்கிறது.

மதுரைக்கோயிலில் காணப்படும் எழுநூறு ஆண்டுகளைச் சார்ந்த கல்வெட்டுப் பொறிப்புக்கள் காலந்தோறும் அதன் நிலையையும் வளர்ச்சியையும் அக்காலத்து சமூக, சமய, அரசியல் நிலையினையும் காட்டும் காலக்கண்ணாடியாக விளங்குகின்றன. இவற்றில் ஒருசில கல்வெட்டுக்குரிய முழுமையான வாசகங்களே இதுவரை வெளியிடப்பட்டுள்ளன. ஏனைய கல்வெட்டுகளின் சுருக்கமான குறிப்புகளே மத்திய தொல்லியல்துறையின் ஆண்டறிக்கையில் வெளியிடப்பட்டுள்ளன. இக்கல்வெட்டுக்களின் முழுமையான

வாசகங்கள் வெளியிடப்படுமானால் இன்னும் பல வரலாற்றுச் செய்திகளை அறிய வாய்ப்பேற்படும்.

# அடிக்குறிப்புகள்

1. வி.ரா. இராமச்சந்திர, தீட்சிதர் மூன்றாம் குலோத்துங்கன், சென்னை-1946, பக்-46.
2. PSI. No.163,166
3. ARE. No.272/1941-42
4. ARE. No.187/1943-44; ARE No.193/1943-44; ARE.273/1941-42.
5. ARE. 275/1941-42
6. ARE.468/1962-63
7. ARE.296/1955-56
8. ARE. 192/1943-44
9. ARE.276/1962-63
10. ARE.329/61-62
11. ARE.280/1941-42
12. ARE.326/1961-62
13. ARE.466/1962-63
14. ARE.274/1941-42
15. ARE.279/1941-42
16. ARE.237/1963-64
17. ARE.271/1941-42; ARE.465,469/1962-63; ARE.328/1961-62.
18. ARE.4/1915; ARE.270/1941-42
19. ARE.193/1943-44
20. ARE.187/1943-44
21. ARE.285,286/1905
22. இக்கல்வெட்டு நேரில் படிக்கப்பெற்றது.
23. ARE.60/1905
24. ARE.4/1915

25.ARE.62/1905

26.ARE.278/1942; ARE.131,132/1894; ARE.560/1911; ARE.278/1942

27.ARE.278/1942

28.ARE.188-191/1943-44

29.ARE.306/1949-50, கல்வெட்டுவாசகம் நேரில் படிக்கப்பட்டது.

30.ARE.287/1941-42

31.ARE.161/1937-38

32.ARE.35/1908

33. ARE.269/1941-42

34.ARE.266,267/1941-42

35.ARE.268/1941-42

36.ARE.287/1941-42

37,ARE.284,288/1941-42; ARE.6/1915

38.ARE.195/1943-44

39.ARE.282/1941-42

## துணைபுரிந்த நூல்கள்


1. South Indian Inscriptions Volumes Nos. IV to VIII, XXIII.

2. Annual Reports on Indian Epigraphy. Year 1890,1908,1915,1937-38, 1941-42, 1943-44, 1955-56, 1961-62, 1962-63, and 1963-64.

3. R.Sathianatha Ayer, History of Nayaks of Madurai,Madras,1924.

4. D.Devakunjari, Madurai through the Ages, SAHER, Madras 1979.

5. A.V.Jayachandran, Madurai Temple Complex, Madurai-1985.

6. மதுரைக்கோயில் கும்பாபிசேகமலர்கள், 1963,1974 ஆண்டுகளில் வெளிவந்தவை.

7. வெ.வேதாசலம், பாண்டியநாட்டில் வாணாதிராயர்கள், மதுரை-1987.

8. என்.சேதுராமன், பாண்டியர் வரலாறு, கும்பகோணம். 1989.

# மாறிவரும் விருந்தோம்பல் பண்பு
(Value of Hospitality)

பேரறிஞர் மு. மீனா

இந்தியப்பண்பாட்டில் குறிப்பிடத்தகுந்த மதிப்புகளுள் ஒன்று விருந்தோம்பல். நம் வாழ்க்கை முறையில் பின்னிப் பிணைந்த பண்புகளுள் இதுவும் ஒன்று. இந்தியாவில் உங்களைக் கவர்ந்தது எது? என்று வெளிநாட்டவரிடம் கேட்டால், இந்தியர் களுடைய விருந்தோம்பல் பண்பு என்று உறுதியாகக் கூறுவர்.

சங்ககாலத்தில் விருந்தோம்பல் பண்பு மிகச்சிறப்பு - டையதாக விளங்கியது. "செல் விருந்து ஓம்பி வருவிருந்து நோக்கிக்" காத்திருக்கும் பண்பு அக்காலத்தே மக்களிடம் நிலவிவந்தது. விருந்தினர்கட்கு முதலில் உணவு அளித்து அவர்களை வழியனுப்பி வைத்துவிட்டு, இனிமேல் யாராவது விருந்தினர்கள் வருகிறார்களா? என்று காத்திருந்து, பிறகே இல்லத்தில் உள்ளவர்கள் உணவருந்துவர். 'பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல்' சிறப்பாகக் கருதப்பட்டது. 'செல்வர்க்கழகு செழுங்கிளை தாங்குதல்' என்பது அறநெறியாகக் கருதப்பட்டது.

செல்வந்தர்கள் மட்டுமல்லாது, ஏழையரும் விருந்தோம்பல் பண்பு நிறைந்தவர்களாக விளங்கினர். சங்ககாலப்புலவர்களுள் ஒருவர் பெருஞ்சித்திரனார். அன்றைய புலவர்கள் மன்னரையும் செல்வந்தர்களையும் புகழ்ந்து பாடிப் பரிசில்பெற்று வாழ்க்கை நடத்தியவர்கள். ஏழைப்புலவராகிய பெருந்சித்திரனாரும் ஒருமுறை குமணவள்ளலைப் புகழ்ந்து பாடிப் பெருஞ்செல்வத்தைப் பரிசாகப் பெற்றுவந்தார். பெற்ற பொருளை மனைவியிடம் கொடுத்து, 'இதுவரை நமக்கு உதவியவர்கள், நம்மையே அண்டிவாழும் உறவினர்கள்

அனைவருக்கும் கொடு' என்று கூறுகின்றார். இதனை,

'இன்னோர்க் கென்னாது என்னோடுஞ் சூழாது
வல்லாங்கு வாழ்தும் என்னாது நீயும்
எல்லோர்க்கும் கொடுமதி மனைகிழ வோயே'

எனவரும் புறநானூற்று வரிகளால் உணரலாம். நல்லவர்களா? கெட்டவர்களா? என்று எண்ணிப்பார்க்காமலும், கணவனிடம் கேட்டுச் செய்யலாம் என்றும், பொருளைப் பாதுகாத்து வைத்திருந்து நாளைக்குச் சிறப்பாக வாழலாம் என்றும் எண்ணாமல் எல்லோருக்கும் வழங்கு என்று தங்களைச் சுற்றித் தங்களை நம்பி வாழும் அனைவரையும் காக்கவேண்டியது நம் கடமை என்பதைக் குறிப்பாகச் சுட்டுகின்றார்.

கடமையாக மட்டும் எண்ணாமல் இனிய முகத்தோடு விருந்தினர்களை உபசரிக்க வேண்டும் என்று வள்ளுவரும் வலியுறுத்திக் கூறுகின்றார். அனிச்சமலர் மென்மையானது. அது முகர்ந்து பார்த்த அளவில் நம் மூச்சுக்காற்றுப்பட்டு வாடிவிடும் இயல்புடையது. ஆனால் விருந்தினர்களோ அனிச்சமலரைவிட மென்மையானவர்கள். விருந்தினர் வருகையை விரும்பாமல் நம்முகத்தில் சிறுமாற்றம், சிறுகுறிப்புத் தெரிந்தாலே போதும், வந்த விருந்தினர் வாடிவிடுவர். வெளிப்படையாகச் சில சொற்கள் சொல்லித்தான் நம் விருப்பமின்மையைத் தெரிவிக்க வேண்டும் என்பதில்லை. சிறுமாற்றத்தை வைத்தே அவர்கள் நம் மனநிலையை உணர்ந்துவிடுவார்கள். எனவே இனிய முகத்தோடு விருந்தினரை உபசரிக்க வேண்டும் என்பதை,

"மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து"

என்று வள்ளுவர் கூறியுள்ளார்.

விருந்தினரை வரவேற்கும் முறையிலும் மிகுந்த நாகரிக உணர்வுடையவர்கள் நம் முன்னோர்கள். விருந்தாக

வந்தவர்களை ஏழு அடி முன்வைத்து வந்து வீட்டிற்குள் அழைத்துச் செல்வதும், அவர்கள் திரும்பும்போது, அவர்களுடன் ஏழுஅடி நடந்துவந்து வழியனுப்பி வைப்பதும் நம் பண்பாடு. இக்குறிப்பு சிலப்பதிகாரத்தில் சிறப்பாகச் சுட்டப்பட்டுள்ளது.

மாதவியின் நாட்டிய அரங்கேற்றம் நடந்து முடிந்தவுடன், கோவலன் மாதவியுடன் இணைந்து வாழ்கிறான். இந்திரவிழாவின் போது, ஊடல்கொண்டவன் கோபத்தோடு திரும்புகிறான். நேரே கண்ணகியிடம் வந்து, வேறு ஊருக்குச்சென்று பிழைக்கலாம் என்று எண்ணுகிறேன் என்று கூறவும், "சிலம்புள கொண்ம்" என்று கூறி அவனோடு கண்ணகி புறப்பட்டு வந்துவிடுகின்றாள். மதுரைக்குப் புறத்தே தங்கியிருக்கும் போது கோவலன் கண்ணகியைப் பார்த்து, என்னுடன் வா என்று கூறியவுடன் புறப்பட்டு வந்துவிட்டாயே என்று தன் தவற்றையெல்லாம் கூறி மனம் வருந்துகின்றான். இதுவரை எதிர்த்து ஒரு வார்த்தைகூடப் பேசாத கண்ணகி அப்போதுதான் வாய்திறந்து,

"அறவோர்க்கு அளித்தலும், அந்தணர் ஓம்பலும்
துறவோர்க்கு எதிர்தலும், தொல்லோர் சிறப்பின்
விருந்து எதிர்கோடலும் இழந்த என்னை"
(கொலைக்களக் காதை 71-74)

என்று உரைக்கிறாள். "விருந்து எதிர் கோடல்," அதாவது விருந்தினரை வரவேற்று உபசரித்தல் என்னும் சிறந்த பண்பைப் பேறாகக் கருதி வாழ்ந்தனர் என்பது இக்குறிப்பிலிருந்து அறியமுடிகின்றது.

'உண்டிக்கழகு விருந்தோடு உண்ணல்'
'விருந்தில்லா உணவு மருந்து'

போன்ற பழமொழிகளும் வழக்கில் இருந்தன.

இல்லறத்தாருடைய கடமைகளுள் ஒன்று அதிதிகளைக்

காத்தல் என்பது. எவ்வளவு இன்னல்கள், துன்பங்கள், இடையூறுகள் நேர்ந்தாலும் விருந்தாக வந்த அதிதிகளைக் காக்கத் தவறியவனே இல்லை. இதற்கு நம்மிடையே பற்பல சான்றுகள் உள்ளன.

சிவபெருமானால் 'அம்மையே' என்று அழைக்கப் பட்டவர் காரைக்கால் அம்மையார். இவரது இயர்பெயர் புனிதவதி. அவருக்கும் பரமதத்தன் என்னும் வணிகருக்கும் திருமணம் நடந்தேறியது. ஒருநாள் பரமதத்தனைக் காணவந்தவர்கள் இரண்டு மாங்கனிகளை வழங்கினர். அவரும் அவற்றைத் தம் இல்லத்திற்கு அனுப்பிவைத்தார். அவ்வேளையில் சிவனடியார் பசியால் வாடி அங்கு வந்தார். அவருக்குப் புனிதவதியார் திருவமுது படைத்தார். அத்துடன் மாங்கனிகளுள் ஒன்றையும் அளித்தார். உண்ட அடியார் வாழ்த்தி விடைபெற்றார். உணவுண்ண வந்த பரமதத்தன் மற்றொரு மாங்கனியைச் சுவைத்தார். மற்றொன்று இருக்கின்றதே என அதனையும் கேட்க, அம்மையார் இறைவனை வேண்டிப்பெற்றார். இக்கனி மிகச் சுவையாக இருப்பதையறிந்த பரமதத்தன் காரணத்தை வற்புறுத்திக் கேட்க உண்மை விளங்கியது. இந்த நிகழ்வு அடிப்படையில் பின்னர் புனிதவதியார் இல்லறம் துறந்து துறுவியானார்.

இதுபோலவே அடியாராக வந்த சிவனுக்கு, அவரின் வேண்டுகோளுக்கிணங்கப் பிள்ளைக்கறி சமைத்துக்கொடுத்த சிறுத்தொண்டர் வாழ்க்கையும், மகன் இறந்து பட்டதை வெளியிடாமல் திருநாவுக்கரசருக்கு உணவூட்ட முனைந்த அப்பூதியடிகளின் வாழ்க்கையும், வயலில் விதைத்த நெல்லை அரித்து வந்து சிவனடியார்க்கு விருந்தூட்டிய இளையான்குடி மாறன் நாயனார் வாழ்க்கையும், விதைப்பதற்கு வைத்திருந்த நெல்லைத் திருவனந்தபுரம் சென்ற அடியார் கூட்டத்திற்குச்

சமைத்துவைத்த செல்வநம்பி மனைவியின் செயலும் ஆகிய இவையாவும் விருந்தினர்களாக வந்த இறையடியார்களைப் பேணுதலை இல்லறத்தார் தம் கடமையாகக் கொண்டு ஒழுகிவந்ததை விளக்கி நிற்கும். தர்ம சாஸ்திரங்களும் வேதங்களும் துறவிகளைக் காத்தல் இல்லறத்தார் கடமை என்றே குறிப்பிடுகின்றன. இதுபோன்ற பற்பல சான்றுகள் நம்மிடையே உண்டு.

அன்றைய மக்களின் வாழ்க்கை மதிப்புகளைப் பதிவுசெய்து வைத்துள்ளவை இராமாயணமும் மகாபாரதமும். இவ்விரு காவியங்களும் விருந்தோம்பலைச் சிறப்பாகச் சுட்டியுள்ளன. பஞ்சவடியில் இராமஇலக்குவர், சீதை மூவரும் தங்கியிருந்தபோது சூர்ப்பனகையால் தூண்டப்படுகிறான் இராவணன். சீதையின் அழகில் மயங்கியவன் எவ்வாறேனும் அவளை அடைய வேண்டும் என்று எண்ணுகிறான். மாரீசன் கண்ணைக் கவரும் மானாக வந்து, இராம இலக்குமனை அங்கிருந்து அப்புறப்படுத்த எண்ணுகிறான். மானைக் கண்டு மயங்கிய சீதை அம்மானைப் பிடித்துத் தரும்படி இராமனிடம் கேட்கிறாள். இலக்குவன் இதில் ஏதோ சூது இருக்கிறது என்று தடுக்கிறான். ஆனால் இராமரும், சீதையும் அதனைப் பொருட்படுத்தவில்லை. இராமர் மானைப்பிடித்து வருவதற்காகச் செல்கிறார். மானின் சூழ்ச்சியால் மிகத்தொலைவிற்கு அழைத்துச் செல்லப்படுகிறார். இறுதியில் மான் இறந்துபடும்போது, இராமனின் குரலால் இலக்குமனா என்று கத்துகிறது. சீதை இராமனுக்குத்தான் ஏதோ நேர்ந்துவிட்டது என்று பதைபதைக்கிறாள். இலக்குமன், இராமனுக்கு எதுவும் நேராது என்று எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் சீதை மனம் ஏற்கவில்லை. இவனோ சூழ்ச்சி ஏதோ நடைபெறுகிறது என்று உணர்கிறான். எனவே கோடு ஒன்று போட்டு இதனைத் தாண்டி

வெளியேற வேண்டாம் என்று அறிவுறுத்திவிட்டுச் செல்கிறான். அந்நேரத்தில் இராவணன் துறவி வேடம் புனைந்து குடிலுக்கு வருகிறான். வந்த துறவியை வரவேற்கிறாள் சீதை; கோட்டைத் தாண்டுகிறாள்; கேட்டை அடைகிறாள். உணவளித்து உபசரிப்பதில் ஒரு நெறியை நம்முன்னோர் பின்பற்றினர் என்பது இந்நிகழ்ச்சியின் வாயிலாக அறியப்படுகிறது.

இதுபோலவே மகாபாரதத்திலும் ஒரு நிகழ்வு சுட்டப்படுகின்றது. திரௌபதி அட்சயபாத்திரம் கொண்டு காமியகவனத்தில் அனைவரையும் உபசரித்து வருகிறாள். பாண்டவர்களை எவ்வாறேனும் அழிக்கவேண்டும் என்று எண்ணுகிறான் துரியோதனன். துர்வாச முனிவரைச் சந்திக்கின்றான். காட்டில் பாண்டவர்கள் உள்ளனர்; அவர்களையும் சென்று கண்டு வாருங்கள் என்று உரைக்கின்றான். மதிய உணவுவேளை முடிந்தபிறகு அங்குச் செல்லுமாறு துரியோதனன் வழிநடத்துகின்றான். அதுபோலவே துர்வாசமுனிவரும் சீடர்களோடு பாண்டவர்களைக் காணச்செல்கின்றார். பாண்டவர்களும் மற்றவரும் உண்டு முடித்த நேரம். துர்வாசர் அங்கு சென்று, நீராடிவிட்டு வருகிறோம், உணவு தயார் செய்துவை என்று கூறிச்செல்கிறார். திரௌபதி குழம்புகின்றாள். அனைவரும் உணவு உண்டு முடித்தாகிவிட்டது; அட்சய பாத்திரத்தையும் கழுவி வைத்தாகிவிட்டது; 'கழுவிய பிறகு, இனி உணவினைப் பெறல் என்பது முடியாதே, என் செய்வது என்று வருந்துகின்றாள். கிருஷ்ணரிடம் முறையிடுகிறாள் .துர்வாசமுனிகளோ மிக்கக் கோபகுணம் உடையவர். உணவு தயாரில்லை என்பது அறிந்தால், சுணக்கம் அறிந்தால் சாபம் இடுவாரே என் செய்வது என்று மனம் பதைக்கிறாள். துரியோதனனின் சூழ்ச்சி அறிந்த கிருஷ்ணர், அட்சய பாத்திரத்தில் ஒட்டியிருந்த ஒரு பருக்கைச்சோற்றைப்

பார்க்கிறார். அதனை எடுத்து வாயில் போட்டுக்கொண்டு, வயிறு நிரம்பியது என்று கூறுகிறார். ஆற்றங்கரையில் நீராடி முடித்த முனிவருக்கும் பசி மறைந்து, உண்ட திருப்தி ஏற்படுகிறது. துரியோதனின் சூழ்ச்சி பலிக்கவில்லை. இந்நிகழ்வும் மனங்கோணாமல் விருந்தினரை உபசரிக்க வேண்டியது ஒரு கடமை என்பதை வெளிக்காட்டி நிற்கின்றது. இவை எல்லாமே பாரத மக்களுடைய விருந்தோம்பல் பண்பினையே விளக்கி நிற்கின்றன.

ஆனால் இன்று விருந்தோம்பல் பண்பு எவ்வாறு உள்ளது? ஒரு குடும்பத்தில் கணவன் – மனைவி இரண்டுபேரும் வேலைக்குச் செல்லவேண்டிய நிலையே பெரும்பான்மையும் காணப்படுகின்றது. கூட்டுக்குடும்ப வாழ்க்கை முறையும் அருகிவிட்டது. மக்கள் இன்று அவர்கள் தேவை, விருப்பம் இவற்றின் அடிப்படையில் வாழ்க்கையை நடத்தவில்லை. அவர்கட்குக் கிடைக்கின்ற நேரத்தின் அடிப்படையில்தான் வாழ்க்கையை ஓட்டுகின்றனர். இந்த முறையில் வாழும்போது, காலைநேரத்தில் (பணிக்குக் கிளம்புகின்ற) விருந்தினர் வந்தால் எவ்வாறான மனநிலை ஏற்படுகின்றது. வந்தவர்களை வாருங்கள் என்று கேட்பதற்கு முன்னாடியே, ஒரு கடிதம்போட்டு விட்டு வந்திருக்கக்கூடாதா? ஒரு போன் பண்ணிட்டு வந்திருக்கக் கூடாதா? என்றுதான் கேட்கிறோம். ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் பணியே முக்கியம் என்று கருதுகின்றோம். யாராவது வந்துவிட்டால் ஒரு சுமையாகத்தான் கருதுகின்றோம். வந்த விருந்தினரும் அவசிய, அவசர சூழல் காரணமாக வந்தவராகக் கூட இருப்பார். ஆனால் நாம் இப்படிக் கேட்டவுடன், அவர்கள் மனம் வருந்தக்கூடிய நிலைதான் ஏற்படுகின்றது. 4 நாட்கள் தங்கிச் செல்லவேண்டும் என்ற எண்ணத்தில் வந்தவர்கள்கூட மறுநாளே கிளம்பிச் சென்றுவிடுகின்றனர். ஏன் இம்மதிப்பு மக்கள் வாழ்கையில் மாறியுள்ளது? மதிப்பு மாறியுள்ளதா? மக்கள் மாறிவிட்டார்களா?

எந்தவொரு மாற்றமும், எந்தவொரு புரட்சியும் திடீரென்று நிகழ்வதில்லை. சிறிது சிறிதாக வேறுபாடு நிகழ்ந்து, பின்னர்தான் நிலையான மாற்றம் நிகழ்கின்றது. அதுபோல்தான் இம்மதிப்பின் மாற்றமும் நிகழ்ந்துள்ளது. ஒருமுறை சுவாமி நித்யானந்த மகராஜ் ஜீ உரையாற்றும் போது,

> 'இந்தியப்பழக்க வழக்கங்கள் மறைந்து கொண்டிருக்கின்றன; அதனைப் புதுப்பிக்க வேண்டும்' என்று குறிப்பிட்டார்!

புதுப்பிக்க வேண்டிய கட்டாயத்திற்குள்ள மதிப்புதான் விருந்தோம்பல் என்பது.

மக்களுடைய வாழ்க்கைத்தரம் (வசதி, வாய்ப்புகள் உள்ளிட்ட) *மாற்றம் பெற்றுள்ளதா?* இல்லை, *வாழ்க்கைமுறை மாறியுள்ளதா?* நம்முடைய வாழ்க்கைமுறை (Way of life style) மாறியுள்ளதுதான் இதற்குக் காரணம். நாம் வாழ்கின்ற வீட்டு அமைப்பு - அது ஒன்றே நம் வாழ்க்கைமுறை மாறியுள்ளதையும் விருந்தோம்பல் பண்பு குறைந்துள்ளதையும் சிறப்பாக வெளிக்காட்டும். முன்பு சாலையின் இருபுறங்களிலும் மரங்களை வளர்த்திருப்பர். வீட்டிற்கு முன்னால் பெரிய முற்றம்; அதனையடுத்து இருபுறமும் திண்ணையுடன் கூடிய வாசல்; உள்ளே காற்றோட்டத்துடன் கூடிய அறைகள். இந்த முறையில்தான் நம் முன்னோர்கள் வாழ்ந்த வீட்டு அமைப்பு காணப்படும். அதற்கும் வாழ்க்கைக்கும் என்ன தொடர்பு? அன்றைய மக்கள் ஓரிடத்திலிருந்து வேறு ஊருக்குச் செல்லவேண்டும் என்றால் நடைப்பயணம்தான் மேற்கொண்டனர். நடந்து செல்லும்போது மக்களுக்கு மர நிழல் பாதுகாப்புத் தருகிறது. சிறிது இளைப்பாறிச் செல்வதற்கு, வீட்டின் முற்றம் உதவும். இரவுப் பொழுதில் வழிப்போக்கர்கள் வீட்டின் திண்ணையில் தூங்கிவிட்டு, விடிந்தபிறகு தங்கள் பயணத்தைத் தொடங்கினார்கள். இவ்வாறு வழிப்பயணம் செய்பவர்களின்

நன்மைகருதியே வீட்டைக்கட்டி வாழ்ந்தனர். ஆனால் இன்று நம் வீட்டின் அமைப்பு எவ்வாறு இருக்கிறது? வீடுகட்டுவதற்காக மனை வாங்கிப்போடுகிறோம். முதல் காரியமாக மனையைச் சுற்றி வேலி போட்டுவிடுவோம். வீடுகட்டுகின்றோம். நகருக்குள் எங்காவது திண்ணை வைத்துள்ள வீட்டைப் பார்க்க முடிகிறதா? சிறியவாசல், வாசலுக்கேற்ற கதவு; கதவைவிட வலிமையான பூட்டு; அத்துடன் இரும்புக்கிராதியும் போட்டுவிடுவோம். நிழலுக்காகக்கூடப், பிறிதொருவர் ஒதுங்குவதைப் பெரும்பான்மையோர் ஒத்துக்கொள்வதில்லை. காலங்கிடக்கின்ற நிலையில யாரை நம்பமுடியும்? என்று தத்துவம் பேசுகின்றோம். தொடர்ந்து 5 நிமிடம், 10 நிமிடத்திற்குமேல் வீட்டுவாசலில் ஒருவர் நின்றுகொண்டிருந்தால், இந்த ஆள் எதற்கு இங்கே நிற்கிறான்? இத்தனை வீடுகள் இருக்கும்போது நம்வீட்டு வாசலில் வந்து இவன் ஏன் நிற்கவேண்டும் என்று ஆயிரங்கேள்விகள் மனதைக்குடையும். வாசலில் நிற்பவர் வெயிலுக்காக, மழைக்காக, பேருந்துக்காக, நண்பருக்காக என்று ஏதாவது ஒரு காரணத்திற்காக நின்று கொண்டிருப்பார். அவர் அந்த இடத்தை விட்டு நகர்ந்த பிறகுதான் நாம் நிம்மதிப் பெருமூச்சு விடுகின்றோம்.

நகர் இப்படி. புறநகர்ப் பகுதியைப் பாருங்கள், வீட்டிற்கு முன்னால், பின்னால் இருபுறம் என்று நான்குபக்கமும் இடம்விட்டுக் கட்டுகின்றோம். எதற்காக? அப்படி இடம் விட்டால்தான், வீடு கட்டுவதற்கு அனுமதி கிடைக்கும். அதற்காக இடம் விடுகிறோம். வீடு கட்டிமுடிக்கும் போதே சுற்றுச்சுவரும் (Compound wall) சேர்த்தே கட்டிவிடுவோம். புதுமனைப் புகுவிழா நடந்தேறிய பிறகு, நாம் குடியிருக்க உள்ளே போகிறோமோ இல்லையோ, சுற்றுச்சுவரில் ஒரு அறிவிப்புப் பலகை தொங்க விடுகின்றோம். ‘நாய்கள் ஜாக்கிரதை’ என்று.

பின்னர்தான் பிறபொருட்களை வீட்டுக்குள் கொண்டுவருகிறோம். வீட்டுக்கொரு மரம் வளர்க்கிறோமோ இல்லையோ, வீட்டுக்கொரு நாய் வளர்க்க வேண்டும் என்ற கொள்கை உடையவர்களாக நாம் இருக்கின்றோம். மனிதர்கள் வந்து ஒதுங்குவதற்கே இவ்வளவு கெடுபிடி என்றால் விருந்தோம்பல் பண்பு எங்கு இருக்கும்?

மீன்குஞ்சுக்கு யாரும் நீந்தக் கற்றுக்கொடுப்பதில்லை. அதுபோல் யாரும் மதிப்புகளைப் புகட்டுவதில்லை. தானாக வாழ்க்கை முறையிலிருந்து கிரகித்துக் கொள்ளவேண்டும். 'Values are not taught; they are caught' என்று ஆங்கிலத்தில் இதனைக் குறிப்பிடுவர். குடும்பமும் கல்வி நிறுவனமும் இரண்டும்தான் மனிதர்களை வடிவமைக்கின்றன. நம் முன்னோர்கள், நம் பெற்றோர்கள் குழந்தைகளை வளர்த்த முறைக்கும் இன்றுள்ள குழந்தை வளர்ப்பு முறைக்கும் பெரிய வேறுபாடு உண்டு. முற்காலத்தில் பெரியவர்கள் குழந்தைக்கு உணவு ஊட்டும்போது, குழந்தையின் கை விரல்களைப்பற்றிக் கொண்டு, இது சோறு, இது குழம்பு, இது காய், கீரை, சாம்பார், பருப்பு, ரசம், தயிர், பாயசம், அப்பளம், வடை என்று சொல்லி, இது தாத்தாவிற்கு, இது பாட்டிக்கு, இது அம்மாவுக்கு, அப்பாவிற்கு, அண்ணனுக்கு, அக்காவிற்கு, மாமா, அத்தை என்று பட்டியல் நீண்டு கொண்டே போகும். கடைசியில் இது உனக்கு என்று ஒவ்வொன்றாகச் சொல்லிச் சொல்லி உணவை ஊட்டுவார்கள். கடைசியில் கழுவிக் கழுவி காக்காக்கு ஊத்து; கழுவிக் கழுவி குருவிக்கு ஊத்து என்றும் குறிப்பிடுவர். இது வெறுமே உணவு ஊட்டுகின்ற முறையா? தாய் உணவு ஊட்டும்போது, உணர்வுகளையும் சேர்த்து அல்லவா ஊட்டுகின்றாள். இப்படி வளரும்பிள்ளை எல்லோரையும் அரவணைத்து வாழவேண்டும்; எல்லோருக்கும் கொடுக்க வேண்டும்; மனிதர்களுக்கு மட்டுமல்லாமல் நம்மை

அண்டிவரும் பிற உயிர்களையும் காக்க வேண்டும் என்ற உணர்வு பெறும். விருந்தோம்பல், பிறரிடம் அன்பு காட்டல், தாராள மனப்பான்மை, கருணை, மனிதநேயம் போன்ற நற்பண்புமதிப்புகளோடு அக்குழந்தை வளரும்.

இன்றைக்கு நாம் எப்படிக் குழந்தைகளை வளர்க்கிறோம். முதலில் நாம் சொல்லிக் கொடுக்கின்ற பழக்கம் "மாமாவிற்கு டாட்டா சொல்லு" என்பதுதான். பள்ளிக்குக் குழந்தைகளை அனுப்பும்போது, "யாருக்கும் கொடுக்காமல் நீயே முழுவதையும் சாப்பிட்டு விடவேண்டும்" என்று அறிவுரை சொல்லியல்லவா அனுப்புகிறோம். என் தோழியொருத்தி; அவளும் அவள் கணவரும் மிகப் படித்தவர்கள், நல்ல பணியில் உள்ளவர்கள். அவர்களுக்கு ஒரே ஒரு பையன், அவனுக்குச் சாப்பாடு எப்படி ஊட்டுவாள் தெரியுமா? பையனுக்கு ஊட்டச்சத்து நிறைந்த உணவு கொடுப்பாள். அக்குழந்தை ஓரளவு சாப்பிட்ட பிறகு, வேண்டாம் என்று மறுக்கும், தட்டில் மீதம் சாப்பாடு இருக்கும். உடனே இவள் சொல்வாள். "தம்பி, கடவுள் நம்மைக் கவனித்துக் கொண்டேயிருப்பார். நீ தினந்தோறும் மீதி உணவை வைத்தால், இவர்கள் வீட்டில் அளவுக்கு அதிகமாக உணவு இருக்கிறது, எனவே இன்னொரு பாப்பாவை அனுப்பிவைப்போம் என்று நினைத்து, தங்கச்சிப்பாப்பாவை அனுப்பி விடுவார்" என்பாள். உடனே அப்பையன், வேண்டாம் வேண்டாம் , கொண்டா நானே சாப்பிட்டு விடுகிறேன் என்று சொல்லி ஒரே நிமிடத்தில் சாப்பிட்டு முடித்துவிடுவான். இப்படி வளர்க்கின்ற குழந்தை எப்படிப் பிறருக்கு உதவும்?

நமக்கு முந்தைய தலைமுறைவரை கூட்டுக்குடும்பமாக வாழ்ந்தனர். ஒரு வீட்டில் நிறையக்குழந்தைகள் இருப்பார்கள், அந்தச்சூழலில் வாழ்கின்ற குழந்தைகள் ஒருவருக்கு ஒருவர்

விட்டுக் கொடுத்து வாழ்வர். பொறுமை, அன்பு, இரக்கம், தாராளமனம், பிறருக்கத் தானம் செய்தல், தியாகம், மனிதநேயம் போன்ற நற்பண்புகளைப் பெற்றுவிடும். இன்றைக்கு வீட்டில் ஒரு குழந்தையாக வளர்கின்ற பிள்ளைகட்கு இப்பண்புகள் இருப்பதில்லை. மேலும் முற்காலத்தில் முதல்குழந்தை ஆணாக இருந்தால், வாரிசு பிறந்திருக்கிறான் என்பார்கள். பெண்ணாகப் பிறந்தால் மகாலட்சுமி பிறந்திருக்கிறாள் என்பார்கள். இரண்டாவது குழந்தை ஆணாக இருந்தால், பெரிய பையனைப் பார்த்து, உனக்குக் குடும்பப்பொறுப்பில் தோள்கொடுக்கத் தம்பி பிறந்திருக்கிறான் என்பார்கள். இதுவே பெண்குழந்தையாக இருந்தால், பெரியவனைப் பார்த்து, "நீ தான் இந்த வீட்டிற்குப் பொறுப்புடையவன், நீ தான் தங்கச்சியைப் படிக்கவைக்க வேண்டும்; நகை போட்டுக் கல்யாணம் செய்து வைக்க வேண்டும் என்று சொல்வார்கள். மேலும் நீ தங்கச்சி வீட்டிற்குப் போனால் கோழிஅடித்துச் சாப்பாடு போடுவாள் என்றும் சொல்வார்கள். அக்குழந்தையும் நாம் தான் பெரியவன் என்று தலைநிமிர்ந்து நிற்பான். இப்படி வளர்கின்ற குழந்தைகள் ஒருவருக்கொருவர் அன்போடு வளர்வார்கள்"

இதையே நாம் எப்படிச் சொல்கிறோம். 'டே பங்காளி பிறந்திருக்கான்டா' என்கிறோம். சொத்தைப் பங்குபோட வந்தவன் என்ற மனப்பான்மை சிறுவயதிலேயே தோன்றி விடுகிறது. இதுபோல் பெண்குழந்தைகளைச் சுமை என்ற எண்ணமே மேலோங்க வளர்க்கின்றோம். எனவே இம்மாதிரியான சூழலைத் தவிர்க்க வேண்டியது முக்கியக் கடமையாகும். குழந்தைகளின் வாயிலாகவே தானம் செய்தல், பிறருக்கு உதவுதல் போன்ற காரியங்களைச் செய்தால், குழந்தைகளும் அந்த எண்ணத்தோடே வளரும்.

இதுபோல்தான் கல்வி நிறுவனங்களிலும் கல்வியும் பயிற்சியும் அமைதல் வேண்டும். மதிப்புக்கல்வி என்பது மொழிப் பாடங்களிலேயே பொதிந்துகிடக்கிறது. இலக்கியம் உள்ளிட்ட கலைகளை மனித மதிப்புகளின் களஞ்சியம் என்று குறிப்பிடுவார். I.A. ரிச்சர்ட்ஸ் என்னும் திறனாய்வாளர். இலக்கியப்பாடம் என்பது மனிதனுக்கு வாழும்முறை பற்றி அறிவுறுத்துவதும் அன்றைய மனிதன் எவ்வாறெல்லாம் வாழ்ந்தான், எத்தகைய நெறிகளை, வாழ்வியல் மதிப்புகளைப் பின்பற்றி வாழ்ந்தான் என்பதனை விளக்குகிறது. அனுபவம் என்பதுதான் சிறந்த பாடம். மனிதர்களின் அனுபவத்தைப் பதிவு செய்து வைத்துள்ளவைதான் இலக்கியங்கள். அந்த அனுபவப் பதிவுகள் மனிதன் எவ்வாறு வாழவேண்டும் என்பதைக் கற்பிக்கின்றன. தொழில்சார் கல்வியில் மொழிப்பாடம் இல்லை. மாணவர்கட்குப் பாடச்சுமை அதிகமாகிவிடும் என்று அஞ்சுகின்றோம். அதன் காரணமாக நாம் இயந்திரங்களை உருவாக்குகின்றோமே தவிர, மனிதர்களை உருவாக்குவதில்லை. உண்மைச் சான்று ஒன்று. மருத்துவப்பட்டம் பெற்ற ஒருமகன். தாய் மரணப்படுக்கையில் விழுந்து மிகவும் துன்பப்படுகின்ற சூழலில் கழுத்தை நெறித்துக் கொன்றுவிடுவேன் என்று கூறினான். பிற உயிரைக் காக்கின்ற தொழிலில் உள்ள உங்கள் பையனா இப்படிச் செய்தான்? என்று ஒருவன் கேட்டான். அதற்கு அந்தத் தந்தை, மனிதர்கள் உயிர்காக்கும் மருத்துவன் என்றால் இப்படிச் சொல்லியிருக்க மாட்டான். இவனொரு விலங்குகளுக்குரிய மருத்துவன்தானே என்று வருத்தத்தோடு கூறினார். இப்படி மனிதநேயமற்ற அறிவாளிகளை அல்லவா நாம் உருவாக்குகின்றோம். எனவே மதிப்புசார் கல்வியை நம் பாடத்திட்டத்தில் இணைத்து வழங்க வேண்டும். இது நம் வாழ்வில் மதிப்பை உண்டாக்கும் என்பதில் ஐயமில்லை.

அன்பு அச்சகம், மதுரை-1. ✆ 341116